விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 23 ஜ. அவ்வல் 10 இதழ் 23

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7—3—82

இளங் கலைஞர் மன்றம்

10-ஆம் ஆண்டு இசைவிழா

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம்: 10-3-82 தொடக்கம் 20-3-82 வரை

மாலை 5-00 மணிக்கு.

டிக்கற் விபரம்:

| 11 நாட்களுக்குமான | சீசன் | தினசரி |
|---|---|---|
| 1-ஆம் வகுப்பு | 70/- | 10/- |
| 2-ஆம் வகுப்பு | 40/- | 5/- |
| 3-ஆம் வகுப்பு | 20/- | 3/ |

2452

## இலங்கை 3-156 ஓட்டங்கள்

கராச்சி, மார்ச் 6

இலங்கைகிரிக்கட் கோஷ்டிக்கும், பாகிஸ்தான் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையில் கராச்சியில் ஆரம்பமான முதலாவது கிரிக்கட்டெஸ்டில் இன்று இலங்கைக் கோஷ்டி 3 விக்கட் நஷ்டத்திற்கு 156 ஓட்டங்களை எடுத்தது.

பாகிஸ்தான் கோஷ்டி சகல விக்கட்டுக்கள் நஷ்டத்திற்கும் 396 ஓட்டங்களை பெற்றது. நேற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் கோஷ்டி ஆட்டநேர முடிவில் 8 விக்கட்டுகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (க)

# யாழ். துக்க சம்பவங்கள்: அமைச்சர் காமினி கவலை

வவனியாவில்

## துப்பாக்கி திருட்டு

(வவனியா)

வவனியா நகரசபை விடுதியில் வசிக்கும் அரசாங்க ஊழியர் ஒருவருடைய அனுமதிப் பத்திரம் உள்ள துப்பாக்கி ஒன்று திருட்டுப்போய்விட்டதாகப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அரசுடன்பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதி

(ஏ. வி. மாணிக்கம்)
(யாழ்ப்பாணம்)

**"யாழ்பாணத்தில் துக்ககரமான சம்பவங்கள் நடப்பதையிட்டுக் கவலைப் படுகின்றேன், இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறி நீதி கிடைக்க வழி செய்வேன். அடுத்த தடவை நான் இங்கு விஜயம் செய்யும்போது இப்படியான துக்ககரமான சம்பவங்கள் நிலவ இடமிருக்காது என உறுதியளிக்கிறேன்".**

யாழ்ப்பாண அரசாங் செயலக மண்டபத்தில் நேற்று நடந்த மாநாட்டில் காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மேலும் பேசுகையில்,

"இதுபோன்ற துக்கச் சம்பவங்களைத் தண்டனைக் குட்படுத்துவதுடன் மேலும் இம்மாதிரியான சம்பவங்கள் நடக்க முடியாதவாறு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்துவேன்'' என்றார்.

இம்மகாநாட்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய 14 திட்டங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. [மா]

## யாழ். அபிவிருத்திக்கு 40 கோடி ரூபா!

'காமினி' தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு சுமார் 40 கோடிரூபா செலவில் ஒருங்கிணைந்த அபிவிருத்தித்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளதாக அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

இன்னும் 4—5 ஆண்டுகளில் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு யாழ். மாவட்ட எம். பி.க்கள் உதவி செய்யவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார். (மா)

## "யாழ். சம்பவங்கள்: நீடிக்காமல் நடவடிக்கை மேற்கொள்க"

### அமைச்சர் காமினியிடம் கூட்டணித் தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக பாரதூரமான விளைவுகள் நிலவுகின்றன; அச்சுவேலியில் வலது குறைந்த இளைஞர்ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கடந்த இரவு யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கிலக்காகி, யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இன்றும் சிலர் இராணுவத்தினரின் தாக்குதலால் காயமடைந்துள்ளனர். இந்நிலைமை நீடிக்கவிடாமல் பாரபட்சமற்ற விசாரணை நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்

நாங்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதிலும், உங்களுக்கு நேரில் இச்சம்பவங்களை எடுத்துக்கூறி நிவாரணம் கிடைக்கவேண்டுமென்பதற்காகவே கலந்து கொண்டோம்''.

யாழ். செயலகத்தில்நேற்றுப் பிற்பகல் காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா கலந்துகொண்டமகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசாஉட்படஅபிவிருத்திசபைஉறுப்பினர்கள் யாழ். மாவட்ட எம்.பிக்கள், யாழ். செயலக மேலதிக உதவி அரசாங்க அதிபர்கள் காணி அதிகாரிகள் மற்றும் நீர்வளச்சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் 1915ம் ஆண்டில் கண்டியில் கௌரவமான பிரஜை ஒருவரைப் பிரிட்டிஷ் இராணுவம் சுட்டுக்கொன்றதற்கு பிரிட்டிஷ் இராணுவத்துக்கெதிராக நடவடிக்கை எடுத்ததுபோல் இப்பொழுது வடபகுயில் நடைபெறும் இராணுவத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்களுக்கும் புதிதான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் காணிப் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என்று குறிப்பிட்ட திரு. சிவசிதம்பரம், யாழ்ப்பாணத்தில் விளையும் உப உணவுப் பொருள்களுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அரசியலுக்கப்பால் இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் அமைச்சரை கேட்டுக்கொண்டார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா பேசுகையில், ''25 ஆண்டு காலமாகத் தமிழ்த் தலைவர்கள் கேட்டு வந்த கோரிக்கையை அரசாங்கம் நியைவேற்றியிருந்தால்,இன்று இப்பிரச்னை ஏற்பட்டிருக்காது என்றார்.

தமிழர் — சிங்களவர் ஒற்றுமையை வலியுறுத்தும் அதே நேரம், தமிழ் மக்களின் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றினால் இந்நாட்டில் பிரிவினைக்கே இடமிருக்காது என்று திரு. நடராசா கூறினார்.

## நீதிபதி அளிக்கவேண்டிய தண்டனையை ராணுவத்தினர் நிறைவேற்றுகின்றனராம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலோ அல்லது தீவின் எப்பகுதியிலுமோ தற்சமயம் அவசரகால நிலைமையோ அல்லது ஊரடங்குச் சட்டமோ பிறப்பிக்கப்படவில்லை. அவ்வாறிருக்க இப்பகுதில் இராணுவத்தினர் நடாத்தி வரும் காரியங்களை கேள்விமூலம் அறிந்து பயந்து ஓடிய ஒரே காரணத்திற்காக அப்பாவி தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுடப்பட்டிருப்பதைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தீவிர அணியைச் சேர்ந்த டாக்டர் ச. அ. தருமலிங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''யாழ். நகரின் மத்தியில் மக்கள்நடமாட்டமுள்ளநேரத்தில் இராணுவத்தினர் சில இளைஞர்களை விசாரித்துக் கொண்டிருக்கும் போது அவ்வழியால் வந்த மற்றொரு இளைஞர் அந்நேரம் இராணுவத்தினரால் சுடப்பட்ட இளைஞர் பலத்த காயதுக்குள்ளாகி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திரசிசிச்சைக் குள்ளாகியியிருப்பதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

சாதாரண குடிமகனே அல்

(8ம் பக்கம் பார்க்க)

## உடன் தேவை

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்கு கூலியாட்கள், தச்சுத்தொழிலாளர் உடனே தேவை. மூன்று (பாஸ்போட் அளவு) புகைப்படப்பிரதிகளுடன் பின் வரும் விலாசத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்:

**பலாலி மத்தி**
**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**43, கல்லூரிவீதி**
**காங்கேசன்துறை**

2488

# இன்றுவடக்கில்ஆரம்பமாகும் கிராமோதய சபைகள்

இன்று ஞாயிற்றுக்கிழமை எமது பகுதியில் அதாவது வடக்கு மாகாணங்களில் மலரப்போகும் கிராமோதய சபைகளை ''கிராமியப் பாராளுமன்றம்'' என்று அழைப்பது பொருத்தமானதாகும். பாராளுமன்றத்தில் அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி உட்பட சகலதும் பேசப்படும் ''களமாக'' விளங்குகின்றது. ஆனல் இக்கிராமியப் பாராளுமன்றமான கிராமோதய சபைகளில் முக்கியமாக அவ்வப்பகுதியின் மூலவளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய அரசியல் கலவாத ''அபிவிருத்தி'' ஆராய்வர் என அறியப்படுகிறது. இப்பாராளுமன்றத்தில் அரசியல் தலையீட்டுக்கு இடமே இல்லை. ஆம், அரசியல் சார்ந்த இயக்கங்கள் இப்பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதிலிருந்து விலத்தி வைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றம் என்ருல் கொழும்புதான் ஞாபகத்தில் வரும். ஆனல் அரசின் புதிய திட்டத்தினுல் பாராளுமன்றம் கிராமத்திதிற்கு நகர்த்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுமாக நாட்டில் 4500 கிராமோதய சபைகள் அமைக்கப்படுகின்றன. இவற்றில் பல நாட்டின் ஏனைய பகுதிகளில் சென்ற வருடம் அக்டோபர் மாதம் 15 ம் திகதி மலர்ந்த போதிலும், வடக்கில் ஐந்துமாதம் கடந்துதான் 'நாள்' வைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் சில இடங்களில் இன்னும் 'நாள்' வைக்கப்படவில்லை. இச் சபைகளின் செயலாளராக விளங்கும் விஷேடசேவை உத்தியோகத்தர்களின் நியமனத்தில் 'இழுபறியே' காலதாமதத்திற்குக் காரணமாகும். அரசியற் சார்பற்ற இச்சபைகளின் செயலாளராக விளங்கப்போகும் விஷேட சேவை உத்தியோகத்தர்களின் நியமனம் அரசியல் சார்புடையதாக அமைந்ததே காரணமாகும்

இக்கிராமோதய சபைவிகன் மூத்த சகோதரரான அபிவிருத்தி சபைகள்கூட நாட்டின் மற்றைய பாகங்களில் ''அங்குரார்ப்பணம்'' செய்யப்பட்டபின்பே வடமாகாணத்தில் 'கால் கோள்விழா'' நடைபெற்றது.

## நோக்கம் என்ன?

இச்சபைகள் அமைக்கப்பட்டதின் நோக்கம் என்ன? நிறைவேற்று அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் கிராமங்கள் மாவட்டங்கள் தோறும் நிருவாகத்திற்கும்—நிறைவேற்று அதிகாரபீடத்திற்கும்மிடையில் நல்லதொரு ஒருங்கிணைப்பு ஏற்படுகின்றது. சுருங்கக்கூறின் நிருவாக பரவலை உறுதிப்படுத்துவதற்காகவே அபிவிருத்திச்சபைசள், பிரதேசசபைகள், கிராமோதயசபைகள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. என்று கூறப்படுகின்றது.

இக்கிராமோதய சபைகள் ஏற்கனவே ஒழிக்கப்பட்ட கிராம, பட்டினசபைகளின் இடத்தை நிரப்புபவையாக அமையுடென்றும் முன்னைய சிராம, பட்டினசபைகளில் இருந்ததைப்போலல்லாமல் புதியஅமைப்பில் அமைந்த நிர்வாகம் கிராமவிவகாரங்களை ஆழமாக ஆராயும். அத்துடன் ஒழிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட இரு உள்ளூராட்சிச்சபைகளின் ஒவ்வொரு முன்னுள் வட்டாரங்களிலும் ஒன்றுக்குமேற்பட்ட , கிரா

## அராலியூர்க் குரு

மோதயசபைகள் உருவாக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

இக் ''குட்டிப்பாராளுமன்ற'', சபைகளில் 'எம். பி' களாக அரசியல் சார்பற்ற ஸ்தாபனங்களான தொண்டர் இயக்கங்கள், சங்கங்கள் சமுதாய நலன்புரிச்சங்கங்கள் கிராமிய அபிவிருத்திச்சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், சமயஇயக்கங்கள், சிரமதான சர்வோதய இபக்கங்கள், சனசமூகநிலையங்கள், கூட்டுறவு சமாசங்கள் போன்ற 36 சங்கங்களின் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### வாக்களிக்கும் உரிமை

இவர்களுக்கு மாத்திரம் தான் வாக்களிக்கும் உரிமை உண்டு. வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர் மத்தியில் இருந்து தலைவர் தெரிவுசெய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைவரின் பதவிக்காலம் ஒருவருடகாலம் என்ற அடிப்படையில் ஏனையோருக்குச் சுற்றிவரும். வேதனம் எதையும் பெருமல் சிரமதான அடிப்படையில் கிராமோதயசபைகளின் தலைவர்கள் செயற்படுவர். கிராம சேவகர் பிரிவிலுள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், தபாலதிபர்கள், உதவிவைத்திய அதிகாரிகள், பொது சுகாதார உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், கிராமசேவகர், தாதிமார் போன்ற கிராமமட்டத்தில் அமைந்த பல்வேறு உத்தியோகத்தர்களும் உத்தியோக பற்றற்ற ''எம்.பி'' களாக பிரதிநிதித்துவம் வகிப்பர். கிராமோதய சபைகள் கூடும்போது மேற்படி அதிகாரிகளும் பிரசன்னமாக இருப்பர் ஆனல் இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைஇல்லை. ஆனல் கிராமத்தினை பாதிக்கும் பல்வேறு விடயங்களையிட்டு ஆராயவும், அபிவிருத்திவேலைகளைத்துரிதப்படுத்தவும், திட்டங்களை உருவாக்குவதற்கும் உதவுவர்.

கிராமோதயசபைகள் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஆகக்குறைந்தது 3 சமூகசேவைகள் மன்றங்கள் அங்கத்துவம் வகித்தால் போதுமானது என்றும், ஆனுலும் பெரும்பான்மையான கிராமசேவகர் பிரிவுகளில் 8 முதல் 15 அங்கத்தவர்கள்வரை சபைகளை உருவாக்குவார் என்று அரசு தெரிவிக்கின்றபோதும் வடக்கில், அதிக எண்ணிக்கையைக் கொண்ட அங்கத்தவர்கள் இடம் பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்கள் பகுதியின் தேவைகள், அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள், முதலியனபற்றி கிராமோதய சபைக்கூட்டங்களில் அங்கத்தவர்கள் ஆலோசனைவழங்க வேண்டும் என்று அறியவருகிறது.

அங்கத்தவர்களின் தீர்மானத்துக்கிணங்க இக்கூட்டங்களில் வாக்களிப்பு இரகசியமான வாக்கெடுப்புமூலம் அல்லது வெளிப்படையான வாக்கெடுப்பு மூலம் நடைபெறலாம். சமமானவாக்குகள் பெறப்பட்ட விடத்துத் தலைவரின் வாக்குதீர்மானிக்கும் வாக்காக அமையலாம் இச்சபை ஒருமாதத்திற்கு ஒருமுறை கூடவேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. கூட்டத்தின் அறிக்கைகளை செயலாளரான விஷேட சேவை உத்தியோகத்தர் குறித்துக் கொள்வார் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது கூட்டத்திற்கு அங்கத்தினருக்கு 4 நாட்களின் முன்பு அனுப்பிவைக்க வேண்டும்.

இக்கிராமோதய சபைகள் உருவாக்கப்பட்ட பின் அதற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலும் பிரதேசசபைகள் உருவாகும். இதன் செயலாளராக உதவிஅரசாங்க அதிபர் செயல்படுவர் பிரதேச சபைகளுக்கு கிராமோதய சபைகளின் தலைவர்கள் பிரதிநிதித்துவம் வகிப்பர் இவர் தம்முள் ஒரு தலைவரை தெரிவு செய்வர். கிராமோதயசபைகளின் திட்டங்களும் ஆலோசனைகளும் பிரதேசசபைகளினூடாக அபிவிருத்திச்சபைகளின் அங்கீகாரத்துக்குச் செல்லும் மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தை உருவாக்கும் ஆலோசனைகள் கிராமோதய சபைகளின் ஆலோசனைகளில் அடங்கும் நிர்வாகத்தை பரவலாக்கும் முயற்சியின் ஒரு அத்தியாயமான கிராமோதய சபைகள் கிராமிய மட்டத்தில் பொது மக்கள் தமது அலுவல்களை தாமே மேற்கொள்ளும் நடவடிக்கையாக இக் கிராமியப் பாராளுமன்றங்கள் அமையும்.

[சில குறிப்புகள் அரச வெளியீடுகளிலிருந்து பெறப்பட்டன.]

---

## எப்போதும் இங்கிலீஷ் பேச்சா?

''இங்கிலீஷ் படித்த வக்கில்களும், இங்கிலீஷ் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், தமது நீதிஸ்தலங்களையும், பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறியவுடனே இங்கிலீஷ் பேச்சை விட்டுத் தாம் தமிழரென்பதை அறிந்து நடக்க வேண்டும். எங்கும் எப்போதும் இந்தப் பண்டிதர்கள் இங்கிலீஷ் பேசும் வழக்கத்தை நிறுத்தினுல் உடனே தேசம் மாறுதலடையும். கூடியவரை இவர்கள் தமிழிலெழுதக் கற்றுக்கொள்ள வேண்டும்''.

— (தமிழின் நிலை என்ற கட்டுரையில் பாரதியார்)

---

# பாருக்குள்ளே நல்லநாடு - 6

# பரதத்தின் வழக்குரை!

''இந்தியன் பைன் ஆட்ஸ் ஸொசைட்டி'' யில் பாலசரஸ்வதி தனது தலைமை உரையைத் தொடர்ந்தார்:

தற்போது பரதநாட்டிய வித்யாப்யாஸத்திலும் கச்சேரி அமைப்பிலும் பின்பற்றப்படும் அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், ஜாவளி, தில்லானு, சுலோகம் அல்லது துதிப்பாடல்கள் என்ற வரிசைக்கிரமமே ஆதி பரத சாஸ்திரக்கிரமத்தில் சேராதது என்பதாக புதிதாக ஒரு வாதம் உண்டாகியிருக்கிறது. தற்போதைய போதனைக்கிரமத்தை—கச்சேரி கிரமத்தை சுமார் 150 ஆண்டுகளுக்குமுன் விசேஷமாகப் பரப்பியவர்களும் 'தஞ்சை நால்வர்' எனப்படுபவர்களுமான திருவாளர்கள் பொன்னையா, சின்னையா,

**- மாலி -**

சிவாநந்தம், வடிவேலு என்பவர்கள். சாஸ்திர அடிப்படை இல்லாமலே ஏதோ இப்படியொரு பத்ததியை ஏற்படுத்தித் தந்துவிட்டார்கள் என்று அவர்களைக் கண்டிப்பதைக் கேட்கிறேன். இந்த அமைப்பைத் தகர்த்து 'ஒரிஜினல்' பரத சாஸ்திரப்படியே நமது நாட்டியத்தை மாற்றவேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளப்படுவதைப் பார்க்கிறேன். பரதக் கலையின் லக்ஷியமான் ஆத்ம நிறைவைப் பெறுவதற்காக இந்தப் புரட்சி அவசியமாகிறது என்று காரணம் சொல்லப்படுகிறது.

ஐம்பது வருஷங்களுக்கு மேலாக நாட்டியம் செய்தவர் என்ற அடிப்படையில் சொல்கிறேன்; இன்று நான் என்னளவில் பிரத்தியட்சமாக ஓர் ஆன்ம நிறைவு பெற்றிருப்பதும் பல தேசங்களைச் சேர்ந்த அநேக ரஸிகர்கள் உயர்ந்த ஆத்மீகக் கலாநுபவ நிறைவு பெற்றிருப்பதாகச் சொல்வதும் உண்மையானுல் இந்த நிறைவுக்குக் காரணம் பரதசாஸ்திரத்துக்கு சப்பந்தமில்லாததாகத் தற்போது குறைகூறப்படும் பத்சதிதான் தஞ்சை நால்வர் பிரசித்தப்படுத்திய வழிமுறைதான்!

நான் அவ்வழியிலேயே பிறழாமல் பாடுபட்டவர்தான் அதைத்தவிர வேறு புதுமைகளைப் புகுத்தவோ அல்லது ஆதிப்பழைமையைத் தேடிச் செல்லும் அறிவோவாதிறனோ எனக்கு இல்லை என்று தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன் பரதசாஸ்திரத்தில் கூறும் பாவ, ராக, தாள நுண்ணுணர்வுகளை நான்கற்ற பத்ததியில் சென்றே அநுபவித்து நிறைவுபெற முடிந்திருக்கிறது. ரஸிகர்களுக்கும் இந்த அநுபவப்பூர்த்தியைப் பெற்றுத்தரமுடிந்திருக்கிறது. இப்படி நான் சொல்லிக்கொள்வதில்எனக்குப்பெருமை எதுவுமே இல்லை. தற்போது உள்ள பத்ததிக்கே நிச்சயமாக பரதசாஸ்திரம் கூறும் உத்தம சூக்ஷ்ம் அநுபவங்களை அள்ளிக் கொடுக்கும் பெருமை இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

எப்படி என்று இனம்பிரித்துச் சொல்லமுடியாமல் ஆதியில் ஏற்பட்ட மூலசாஸ்திர தத்துவங்களே அவற்றில் சேராததுபோலவும் அவற்றுக்கு மாறுபட்டதுபோவுங்கூடப்பிற்காலப் பத்ததிகளின் மூலமே பிரகாசிக்கும் விந்தை கலைத்துறையில் மட்டுமன்றி ஆத்மீகமான எல்லாத் துறைகளிலுமே காணப்படுகிறது. பரம வேதாந்த சாஸ்திர தத்துவம் என்னவென்று பார்க்கப்போனுல் அதில் கோவில்கள், குளங்கள், மூர்த்திகள், புராணக் கதைகள், துதிகள், விழாக்கள் எதுவுமே இல்லாமல்தானிருக்கும். ஆனல் இன்று நம் மதம் என்ருலே இவை அத்தனையுமாகத் தானே இருக்கின்றன. எப்படியென்று சொல்லத் தெரியாமல், இவற்றில் பெறுகிற அநுபவம் தானே முதிர்ந்து வேதாந்த ஞானமாகப் பரிணமிக்கிறது! எங்கோ எவரோ சிலர் கோவிலும் மூர்த்தியும் உற்சவமும் இல்லாமலே ஞான நிறைவைப் பெறமுடிகிறது என்பதால் இவை யாவுமே சாஸ்திர சம்பந்தமானவை; இவற்றைத் தூக்கிப்போட்டுவிடவேண்டும் என்பதா? என்ன?

வேதாந்தத்துக்குப் போக வேண்டாம். கலைத்துறையிலேயே நாட்டியத்தோடு பிரிக்கவொண்ணுமல் சேர்ந்துவிட்ட இசைக்கலையைப் பார்ப்போம். இதிலும் பரதமோ, சாரங்கதேவரோ ஸரளி வரிசை, தாட்டுவரிசை; கீதம்; வர்ணம், ஏன்? தற்போதுள்ள பல்லவி, அநுபல்லவி, சரண் அமைப்புக் கொண்ட க்ருதியையும் பற்றிக்கூடத்தான் ஏதேனும் சொல்லியிருக்கிருர்களா? அதனுல் இதெல்லாம் அசாஸ்திரியம் என்பதா? ஒரு கச்சேரி என்ருல் அதை வர்ணத்தில் தொடங்குவது, பிறகு ஆலாபனை, நிரவல், ஸ்வரத்துடன் சில கிருதிகள், அதன் பின் ராகம்—தானம்—பல்லவி முடிவிலேயே சில துக்கடாக்கள் என்று ஏற்பட்டிருக்கின்ற கிரமம் எந்த ஸங்கீத ஸாஸ்திர நூலிலும் கூறப்பட்டிருக்கவில்லையே. இது காரணமாக இந்த அமைப்பைத் தகர்த்துவிடுவதா என்ன? (தொடரும்)

[இத்தலைமையுரையை திருமதி பாலசரஸ்வதி இந்தியன் பைன் ஆட்ஸ் சொஸைட்டியில் தான் நிகழ்த்தினுர். கடந்த வார இதழில் தமிழிசைச் சங்கமெனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது.]

---

# ஆனையிறவில் தேங்கிக்கிடந்த உப்பு ஏற்றுமதியாகும்

(யாழ்ப்பாணம்)

அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான அறுபதினுயிரம் தொன் உப்பை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை உப்புக்கூட்டுத்தாபனம் ஒப்பந்தமொன்றை கடந்தவாரம் செய்து முடித்தது. இந்த ஒப்பந்தம் மூலம் கடந்த பல வருடங்களாக ஆனையிறவு உப்பளத்தில் தேங்கிக் கிடந்த விற்பனவு செய்ய எடுத்த முயற்சியின் உப்புக் கூட்டுத்தாபனம் வெற்றி பெற்றுள்ளது.

இந்த உப்பில் முப்பதினுயிரம் தொன் பங்களாதேசிற்கும் முப்பதினுயிரம் மீதான உப்பு தென் ஆபிரிக்க நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் நாற்பத்தையாயிரம் தொன் உப்பு ஆனையிறவு உப்பளத்தில் இருந்து அரைத்த உப்பாகவும் பதினையாயிரம் தொன் உப்பு குறிஞ்சாத்தீவு உப்பளத்திலிருந்து சாதாரண உப்பாகவும் ஏற்றுமதி செய்யப்படும்.

இந்த உப்பின் முதல்பகுதியாக இரண்டாயிரம் தொன் இம்மாதம் 18ம் திகதி காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரும் ''மேபிள் வூட்'' என்ற கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்படும். எம். வி. ''ஜெற்பூர் முசாப்ர'' என்ற சிங்கப்பூர் கப்பலில் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி நாலாயிரம் தொன் அரைத்த உப்பு தென் அமெரிக்கநாட்டின் இரு துறைமுகங்களில் இறக்குமதி செய்வதற்கு ஏற்றுமதி செய்யப்படும்.

பங்களாதேசிலிருந்துஉப்பை கொள்வனவு செய்ய வந்திருந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து உப்புக் கூட்டுத்தாபன தலைவர் இந்தியாவில் உப்பின் விலைகுறைவாகஇருந்த போதிலும் இலங்கை உப்பை கூடிய விலை கொடுத்து ஏன் கொள்வனவு செய்கிறீர்கள் என கேட்டபொழுது பங்களாதேஷ் வர்த்தகர் இலங்கை உப்பின் கூடிய தராதரமே இதற்குக் காரணம் என்றுர்.

கடந்த பல வருடங்களாக உணவுக் கப்பல்களின் இறக்குமதியை நம்பி வாழ்ந்த துறைமுகத் தொழிலாளர்கள் அரசாங்கத்தினுல் அரிசி இறக்குமதி நிறுத்தப்பட்டதினுல் உணவுக்கப்பல்கள் வராமல் விட்டுவிடும் என்று அஞ்சியிருந்தநேரத்தில் இவ்வாறு ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை பாராட்டியுள்ளனர்.



# அன்றிஸ் அன்ட் கம்பெனி கடல் உணவு பதனிடும் ஸ்தாபனம்

## இன்று (07-03-82) திறப்புவிழா

# ஒரு தேசியப் பணி நிறைவுபெறுகிறது

ஈழத்தின் கடல் உணவு ஏற்றுமதிச் சரித்திரத்தில் இன்று ஒரு புதிய அத்தியாயம் எழுப்பட்படுகிறது,

ஆமாம்; நாவற்குளியில் கண்டி வீதியில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சிதரும் அன்றிஸ் அன்ட் கம்பெனி (லிமிட்டெட்) ஸ்தாபன இயக்குநர்கள் தங்களது புதிய கடல் உணவு பதனிடும் ஸ்தாபனத்தை இன்று காலை பத்து மணிக்கு திறந்து வைப்

டங்களையும் உள்ளடக்கிஇன்று முழு அளவில் இயங்குவதற்குத் தயாராக உள்ளது!

### ஏற்றுமதியில் பெரும் சாதனை

இப்பாரிய ஏற்றுமதி ஸ்தாபனத்தின் பின்னணியிலுள்ள "அன்றிஸ் அன்ட் கம்பெனி" (லிமிட்டெட்) ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்றுனர் (CHIEF EXECUTIVE) திரு. E. M. அன்றிஸ் அவர்களை நாம் சந்தித்தபோது அவர்



பிரதம நிறைவேற்றுநர் (Chief Executive)

**E. M. அன்றிஸ்**



தரம்பிரிக்கப்பட்ட றால்கள் மின்னல் வேகத்தில் தோல் உரிக்கப்படுகிறது

வைத்தோம். பின்னர் கொழும்பை நாடினோம். இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளோம். வட பகுதியில் மேலும் இரண்டு இடங்களுக்கு விஸ்தரிக்கவும் எண்ணமுண்டு..." என்று சொன்னார்.

"யாழ்ப்பாணத்தை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டபோது; "இங்கு போகவேண்டாம். உங்கள் திட்டம் சரிவராது" என்று தான் எல்லோரும் பயப்படுத்தி

சிறியரக றால் வகைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனாலும் முக்கிய ஏற்றுமதி ஐரோப்பிய நாடுகளுக்குத் தான்.

"எமது கம்பெனி ஆழமான அடிப்படைத் திட்டமொன்றில் இத்தொழிலை ஆரம்பித்திருக்கிறது. தொழில் சம்பாதிப்பு மட்டும் எமது நோக்கமல்ல. குறிப்பிட்ட சில மீனவர்களைத்

என்று எண்ணினோம். முதலில் 24 சிங்களப் பெணகளை வரவழைத்து இங்கு தமிழ்ப் பெண்களுக்கு பயிற்சி அளித்தோம்.

"நாம் எதிர்பார்த்ததற்கு மேலாக மிகவும் குறுகிய காலத்துக்குள் எண்பது தமிழ் பெண்கள் முழு அளவில் கடல் உணவுபதனிடும் துறையில் பயிற்சி பெற்றுவிட்டனர்.



றால்கள் முதலில் தரம்பிரிக்கப்படுகிறது



உரிக்கப்பட்ட றால்கள் ஒரு தடவை தரம் பிரிக்கப்பட்டு ஏற்றுமதிக்கு மீண்டுமொரு தடவை தரம் பிரிக்கப்படுகிறது

பதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு தங்களது உயர்வான பங்களிப்பினை வழங்குவதுடன், நாட்டிலேயே மிகப்பெரிய கடல் உணவு பதனிடும் ஸ்தாபனத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்ட பெருமையையும் அள்ளிக் கொள்கின்றனர்!

நாவற்குளியில், கண்டி வீதியில், பதினேழாயிரம் சதுர அடிக் காணியில் பதினொரு மாதங்களுக்குமுன்னர் ஆரம்பிக்கப்பட்ட மண்நிரப்பு — பின்னர் கட்டட நிர்மாண வேலைகள்; ஒரு கோடி ஐந்து (Rs, 10.5 MILLION) லட்சம் ரூபா செலவில் கடல் உணவு பதனிடும் சகல கட்

மனம்விட்டுப் பேசினார்:

"இதில் அதிசயம் ஒன்றும் இல்லை; எல்லாமே மனித முயற்சி. சரியான திட்டம்; நல்ல மனித உள்ளங்கள்; கடினமான—விசுவாசமான உழைப்பு..." என்று கலகலப்புடன் கூறுகின்றார் அன்றிஸ் அவர்கள்.

"நாட்டின் ஏற்றுமதிக்கு ஊக்கமளியுங்கள்; வெளிச் செலாவணி மூலம் நாட்டை கட்டி எழுப்புங்கள்" என்று அரசாங்கம் இரு கரம் நீட்டியது. நாங்கள் இதனைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றோம்" என்று கூறிய அவர்;

"முதலில் காலியில் காலடி

னார்கள். இதற்குத் துணையாக எத்தனையோ கதை சொன்னார்கள். எல்லாம் பொய்த்துவிட்டது" என்று தெரிவித்த திரு. அன்றிஸ் அவர்கள்; தங்களது திட்டத்தை மேலும் விபரித்தார்.

"இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படும் கடல் உணவுவகைகளின் மொத்தப் பெறுமதி இருபத்தைந்துகோடி

தெரிவுசெய்து, அவர்களுக்கு வெளிநாட்டுத் தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் பயிற்சி அளித்து இத்தொழிலை ஒரு பயனுள்ள மேலும் சம்பாத்தியம் தரக்கூடியதாக அவர்களுக்கு மாற்றிக் கொடுப்பதும் எங்களது நோக்கமாகும்.

### 500 பெண்களுக்கு வேலைவாய்ப்பு

'இட்பொழுது இயங்கிக்

இங்குகடமையாற்றும் சிங்களப் பெண்களுக்கும் தமிழ் பெண்களுக்கு மிடையே சகோதர உறவு நிலவுகிறது. இந்த நல்ல செய்திதெற்கிலும் வேகமாகப்பரவுகிறது. தவிர: கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் இடம் பெற்றபோது அந்த நேரத்தில் இங்குபயிற்சி அளித்து வந்த சிங்களப்பெண்கள் குறித்து தென்பகுதியில் என்னஎல்லாமோ கற்பனை செய்யப்பட்டது. ஆனாலும் அந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் உண்மையில் என்ன நடைபெற்றது என்பதை கண்முன்னே தெரிந்துகொண்ட சிங்களப்பெண்கள் தென்பகுதியில் பரப்பிவிடப்பட்ட வீண் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன், யாழ்ப்பாணத்

( 6ம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் ஜெயசீலி கூறுகின்றார்...

யாழ். குருநகரைச்சேர்ந்த செல்வி ஜோசப் ஜெயசீலி (19-வயது) இவ்விதம் கூறுகின்றார்:-

"நான் ஆறுமாதங்களுக்கு முன்னர் இங்கு தொழில் பழக வந்தேன். இங்குவந்துதான் தொழிலை பழகினேன். றால் பிரிப்பது, நிறுப்பது, தோல் பிரிப்பது தரம் பிரிப்பது... என்று பல துறைகளையும் ஆர்வத்துடன் பழகினேன், முதலில் 350 ரூபா சம்பளம் கிடைத்தது. பின்னர் 450 ரூபாவாக அதிகரித்து இப்பொழுது மாதம் அறுநூறு ரூபா பெறுகின்றேன்.

"எங்களுக்கு எந்தக்குறையும் இல்லை. இரண்டு நேரம் தேநீர் கிடைக்கும். மிகுந்த நட்புறவான சூழ்நிலையில் எல்லாப் பெண்களும் வேலைசெய்கின்றனர்.

"அப்பா இறந்து போனார். அம்மா ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கின்றா. நான் ஏழாவது பிள்ளை. எனது உழைப்புத் தான் எங்கள் குடும்ப வாழ்க்கையை ஓரளவு உயர்த்தும். எனது தாயை மட்டுமின்றி சகோதர சகோதரிகளையும் கவனிக்கவேண்டிய பொறுப்பு என்னைச்சார்ந்தது. இரவுநேரத்தில் வேலைமுடிந்து வீடு திரும்புவதுதான் சற்றுச்சிரமம். பிரயாணத்துக்கு கம்பெனி ஏதாவது ஒழுங்கு செய்யுமானால் இரவு நேரத்தில் தாமதமாகப் போவதில் எங்களுக்குப் பிரச்னை இருக்காது.

"இந் நிறுவனத்தில் எமக்கு நம்பிக்கை உண்டு. எங்கள் கடுமையான உழைப்பு ஒளிமயமான எதிர்காலத்தைக் கொடுக்கும் என்று நம்புகின்றோம்" என்றுகூறினார் செல்வி ஜெயசீலி.



சரியான முறையில் இங்கு நிறுக்கப்படுகிறது

ரூபா ஆகும். இவற்றில் எங்களது ஏற்றுமதியை முப்பத்து இரண்டு சத (32) விகிதமாக்க எண்ணியுள்ளோம்.

"ஜப்பானுக்கு பெரிய ரகறால் வகைகளும் ஹோலந்துக்கு

### சுபநேரத்தில் திறப்புவிழா

கடல் உணவு பதனிடும் ஸ்தாபனத்தை இன்று காலை சுபநேரமான பத்துமணிக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சந்தியாபிள்ளை அவர்கள் திறந்து வைப்பார்கள்.

கொண்டிருக்கும் எமது நிறுவனத்தில் முந்நூற்று ஐம்பது பெண்கள் வேலைசெய்கின்றனர். இன்று ஆரம்பித்து வைக்கப்படும் புதிய நிறுவனத்தில் மேலும் நூற்றஐம்பது பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும்.

"யாழ்ப்பாணப் பெண்கள் மிகவும் ஊக்கம் உள்ளவர்கள் கடின உழைப்பாளிகள் என்பதை என்னால் மறுக்கமுடியாது.

"எமது நிறுவனத்தை 1981 ஆகஸ்ட் 24ம் திகதி நாவற்குளியில் ஆரம்பித்த போது இங்குள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பது சிரமமாக இருக்கும்



எல்லாமே முடிந்துவிட்டன! யாழ்ப்பாணத்திலிருந்து வளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கடல் உணவுவகைகள் அழகக 'பாக்' செய்யப்பட்டு குளிரூட்டப்பட்ட நடமாடும் வாகனத்தில் ஏற்றுமதிக்கு தயாராக இங்கு காணப் படுகிறது.

# கலால் வேட்டைக்குச் சென்றஇடத்தில் தாக்குதல்

## இழுபறியில் வயோதிபர் மரணம்

(மாவிட்டபுரம்)

சட்டவிரோத சாராய விற்பனை குறித்து சோதனை நடத்தச் சென்ற கலால்பகுதி உத்தியோகத்தர்கள் வீடொன்றில் சோதனையிட்டுவிட்டுத் திரும்பும்போது கோஷ்டியொன்றினல் சூழப் பட்டு பலமாகத் தாக்கப்பட்டதுடன் அவர்கள் சென்ற ஜீப்பும் சேதப்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் இவர்கள் சோதனை நடத்திய வீட்டிலிருந்த 82 வயது வயோதிபர் திடீர் மரணத்தைத் தழுவியுள்ளார்.

இளவாலை மாரீசன்கூடலில் இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

சங்கானை கலால் பகுதியைச் சேர்ந்த ஜோசெப் அன்ரனி வில்வராஜா, எஸ். சிவலிங்கம் ஆகியோர் தமது ஜீப்பில் இளவாலை மாரீசன்கூடலிலுள்ள வீடொன்றுக்குச் சென்று சட்டவிரோத சாராய விற்பனை குறித்து சோதனை நடத்தினர். சோதனை முடிந்து திரும்பும்போது கோஷ்டியொன்று இவர்களைச் சூழ்ந்து தாக்குதலை நடத்தியதுடன் ஜீப்பையும் பலத்த சேதத்திற்குள்ளாக்கியதாக அவர்கள் காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

இதே நேரத்தில் இவர்கள் சோதனையிட்ட வீடொன்றிலிருந்த சூசை தமியான் என்னும் 82 வயது வயோதிபர் திடீர் மரணத்தைத் தழுவியுள்ளதாகக் காங்கேசன்துறைப் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இளம் பெண் தெரிவித்த தகவல்

6 ஸ்ரீ 3297 இலக்க ஜீப்பில் வந்த சிலர் வீட்டை சோதனையிட்டபின் இவ்வயோதிபரைப் பிடித்து இழுத்து உலுப்பியதாகவும் அதனையடுத்து அவர் மரணமானதாகவும் அவ்வீட்டிலிருந்த கைத்தான் யோகராணி என்னும் இளம் யுவதி காங்கேசன்துறைப் பொலிசில் தெரிவித்துள்ளார்.

பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# மண்டைதீவில் தமிழிசைவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் இம் மாதம் 19,20,21ம் திகதிகளில் தமிழிசைவிழா நடைபெறவுள்ளது மண்டைதீவு சிறுப்புலம் மைதானத்தில் இவ்விழா நடைபெறும்.

மேற்படி விழாவில் ஈழத்தின் பலபாகங்களிலிருந்தும் இன்னிசைக்கலைஞர்கள் பங்குபற்ற விருப்பதாக சங்கத்தலைவர் சங்கீதபூஷணம் நா. கனகலிங்கம் தெரிவித்தார். (அ)

# ஆழியவளை தாக்குதல் வழக்கு: "இரும்புக் கம்பியால் 1-ம் எதிரி அடித்தார்"

(சாவகச்சேரி)

நாங்கள் வானில் சென்றுகொண்டிருக்கும்போது பனங்குத்திபோட்டு வானை மறித்தனர். வான் நிற்பாட்டப்பட்டபோது உன்னைக் கொலைசெய்யப் போகிறோம் என்றனர், பளை சுற்றுநீதிமன்றத்தில் நடந்த ஆழியவளை தாக்குதல் வழக்கில் சாட்சியமளிக்கையில் வேலுப்பிள்ளை சதாசிவம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விழக்கில் ஆழியவளைபருத்தித்துறை வீதியில் வானை மறித்து, வேலுப்பிள்ளை சதாசிவம், வேலுப்பிள்ளை கதிரவேலு என்பவர்களைத் தாக்கியதாகவும் வானுக்குச் சேதமுண்டுபண்ணியதாகவும் ஆழியவளைப் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மண்டலேஸ்வரன் வே. பாலகுமரேசன், பொ. பொன்னுத்துரை என்பவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வாதி தரப்பில் சாஷன் வி. செல்லையாவும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ.பாலக்கிருஷ்ணனும் சட்டத்தரணி ஆர் ஸ்ரீசிவாயாவும் ஆஜராகினர்.

நீதிபதி எம். எச்.காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில் சதாசிவம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் கதவைத் திறக்க முற்பட்டபொழுது 1ம் எதிரி இரும்புக் கம்பியால் அடித்தார் நா[ன்] வானிலிருந்து இற[ங்க] ரியும் இரும்புக்கம்[பியா]ல் அடித்தார். விழுந்துவிட்டேன் வானிலேயிருந்த என்பவரையும் 1[ம் எதிரி] கள் தாக்கினர். வானிலிருந்த தவர் இறங்கி ஓடிவி[ட்டார்].

எனது தலையிலு[ம்] காயமேற்பட்டு ம[ந்திகை வைத்தியசாலை] பத்திரியில் ஒரு சிகிச்சை பெற்[றேன்]. ராசா என்பவரே எங்களை வைத்[திய] எங்கள் வானில் கொண்டு சென்று[ர்].

இவர்கள் எங்க[ளைத்] தாக்கிக் கண்ணுடி[களை உடைத்]ததினுல் 8000 ரூப[ா நஷ்டம் ஏற்]பட்டது.

விசாரணை ஏப்ர[ல் ...] வரை ஒத்திவை[க்கப்பட்டது].

# குளுக்கோஸ் எனநினைத்து நஞ்சுப்பவுடரை சிறுவன் உட்கொண்டானும்

## மரணவிசாரணையில் தகவல்

(பண்டத்தரிப்பு)

குளுக்கோஸ் பவுடர் என்று நினைத்து புகையிலைக்கன்றுக்கு, வீட்டில் வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினிப் பவுடரை தவறுதலாக எடுத்துச் சாப்பிட்ட ஒன்பது வயதுச் சிறுவன் மரணமடைந்தான். உருப்பராயைச் சேர்ந்த எஸ். கிருபைராசா என்னும் மேற்படி சிறுவனின் மரணவிசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது. இறந்த மேற்படி சிறுவன் தமது வீட்டில் ஏனைய சகோதரர்களுடன் விளையாடிக்கொண்டிருந்துவிட்டு கிருமிநாசினிப் பவுடரை குளுக்கோஸ் பவுடர் என நினைத்து தவறுதலாக உட்கொண்டதாகவும், யாழ். அரசினர் வைத்தியசாலையில் உயிர் பிரிந்ததாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

# சந்தேக[நபர்] ரிமாண்[ட்]

(கொழு[ம்பு])

7 வயது சிறுமி[யை பலாத்]காரம்செய்ததாக [...] பட்ட புகாரை[யடுத்து] சந்தேகநபரான [...] சிறுவர் ஆஸ்ப[த்திரி ...] லாளி எம். பி. [...] குமாரகபில [...] பட்டார்.

கொழும்பு மே[...]


முதலீட்டாளருக்கு மற்றுமோர் அதிபெரிய ஊக்குவிப்பு

# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்[டெட்]

# ரூபா 200,000க்கும் அதற்கும் மே[ற்பட்ட] வைப்புகளுக்கு மேலும் அதிக வருமா[னம்]

வருடம் 30% வரை

MASTERS MC 52/81

ஒரு தொகை வைப்பாக இடும் ரூபா 200,000/- இரு வருடங்களில் ரூபா 320,000/- ஆக வளருகிற[து]

| 2 வருட வைப்புக்களுக்கு | 2 வருட வைப்புக்களுக்கு | 1 வருட வைப்புக்களுக்கு | 1 வருட வைப்[புக்களுக்கு] |
|---|---|---|---|
| 30% | 27% | 26% | 24% |
| வருட வருமானம் வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படும். | வருட வருமானம் வட்டியும், போனசும் மாதாந்தம்/கால் வருடம்/அரை வருடம் செலுத்தப்படும். | வருட வருமானம், வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படும். | வருட வருமா[னம் வட்டியும்] போனசும் மாத[ாந்தம்/கால் வரு]டம்/அரை வரு[டம்] செலுத்தப்படும். |

**ரூபா 200,000/- க்கும் குறைவான வைப்புக்கள் வட்டியும் போனசும் முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுதல்**

**2 வருடங்கள் :-**

27% வருட வட்டி ரூபா 100,000/- க்கும் அதிலும் கூடிய வைப்புக்களும்

25% வ. வ. ரூபா 50,000/- இல் இருந்து ரூபா 100,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு

24% வ. வ. ரூபா 2,500/- இல் இருந்து ரூபா 50,000/- க்கும், குறைந்த வைப்புக்களுக்கு

**ஒரு வருடம்**

22% வ. வ. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்

**வட்டியும் போனசும் மாதாந்தம், கால் வருடம் அரை வருடம் செலுத்தப்படுதல்**

**2 வருடங்கள் :-**

24% வ. வ. ரூபா 100,000/- மும் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்

22% வ. வ. ரூபா 50,000/-இல் இருந்து ரூபா 100,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு

21% வ. வ. ரூபா 2500/- இல் இருந்து ரூபா 50,000/- க்கும் குறைந்த வைப்புக்களுக்கு.

**ஒரு வருடம்**

20% வ. வ. ரூபா 2500/-ம் அதற்கும் மேற்பட்ட வைப்புக்களும்,

நம்பிக்கைப் பொறுப்பிற்கும் பாதுகாப்[பிற்கும்] பின்வரும் புள்ளி விபரங்கள் சான்று க[றும்]

| | 1978/79 | 1979/80 |
|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) |
| முதலீடு | 2,250,000 | 2,250,000 |
| ஒதுக்கம் | 7,628,000 | 15,668,000 |
| வைப்புக்கள் | 72,513,000 | 125,835,000 |
| கடன்பாடுகள் | 32,589,000 | 29,623,000 |
| முதிசச் சொத்து | 135,977,000 | 201,311,000 |
| வரியின் முன் லாபம் | 4,764,000 | 3,821,000 |
| வரியின் பின் லாபம் | 2,614,000 | 3,821,000 |
| லாபப் பங்கிடு (வருட இறுதியில்) | 375,000 | 925,000 |

**மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்**

இலங்கையில் அதி பெரியதும் உறுதி வாய்ந்ததுமான நிதி நிறுவனம்
6500க்கும் அதிகமான வைப்பாளரின் அதிக நன்நம்பிக்கையைப் பெற்றுத் திகழும் நிறுவனம்.

...ந்து இறங்க 3ம் எதி
...நம்புக்கம்பி ஒன்றி
...த்தார். நான்கீழே
...டேன். பின்னர்
...பிருந்த கதிரவேலு
...ரயும் 1ம் 3ம் எதிரி
...கினர். அப்பொழுது
...ந்த தவராசா என்ப
...கி ஓடிவிட்டார்.
...தலையிலும் காலிலும்
...பட்டு மந்திகை ஆஸ்
... ஒரு வாரகாலம்
... பெற்றேன். தவ
...பவரே திரும்பிவந்து
... வைத்தியசாலைக்கு
... வானில் ஏற்றிக்
... சென்றார்.
...ள் எங்கள் வானைத்
...ண்ணாடிகளை உடைத்
...000 ரூபா நட்டமேற்
...ணை ஏப்ரல் 27ம் தேதி
...த்திவைக்கப்பட்டது.
[ க )

## ...ந்தேகநபர் ...ாண்டில்

(கொழும்பு)
... சிறுமியை பலாத்
...ய்ததாக செய்யப்
...காரைத்தொடர்ந்து
...ரான பொறளை
... ஆஸ்பத்திரி தொழி
...ம். பி. கே. சாமன்
...ல கைதுசெய்யப்
...ம்பு மேலதிக நீதிபதி

ஆசிரியர்களுக்கு

# "தகுந்த சம்பளம் வழங்க நடவடிக்கை எடுப்போம்!"

## கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

நிதிக்கஷ்டங்கள் பல இருந்தபோதிலும் ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்க நடவடிக்கைஎடுக்கப் படுமென்று கல்விஅமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எம். பி. இ. சில்வா கூறினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஏழாவது ஆண்டு நிறைவுப் பேரவையில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு. சில்வா இக் கருத்தைத் தெரிவித்தார்.

''அரசாங்கத்தின் நிதிப் பற்றுக்குறைகாரணமாக ஆசிரியர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கையின்படி சம்பள உயர்ச்சி வழங்கமுடியாமலிருக்கிறது. ஒன்றரை லட்சம் ஆசிரியர்களுக்கு ஒரு ரூபாய்ப் படி பார்த்தாலும் ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுகிறது. இருந்தும் தகுந்த சம்பளம் வழங்க நடவடிக்கை எடுப்போம்'' என்று லாளர் திரு. எம். பி. சி. சில்வா கூறினர்.

பேரவைக்கூட்டம் யாழ் இந்துக்கல் லூரியில் இ. த. ஆ. சங்கத் தலைவர் திரு. எஸ். கே. வணசிங்க தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை பல பாடசாலைகள் முன்னேற்றமடைய வேண்டியநிலையிலிருக்கின்றன. வஞ்ஞானம், வர்த்தகம், நூல் நிலையம், விளையாட்டு மைதானம் போன்றவை இல்லாமல் பல பாடசாலைகளிருக்கின்றன.

இவற்றையெல்லாம் உள்ளடக்கி ஒரு திட்டம் தயாரித்துள்ளோம். திட்டங்கள் தேவைக்கேற்ப மாற்றப்பட வேண்டும். காலத்துக்கேற்ப திட்டங்கள் மாற்றப்படாவிட்டால் எத்திட்டத்தையும் முன்னேற்றமுடியாது.

எதிர்காலசந்ததியினரின் நன்மை கருதி இத்திட்டத்தை நிறைவேற்ற நீங்கள் ஒத்துழைப்புத்தரவேண்டும்.

### பட்டதாரி ஆசிரியர்கள்

''ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிஆசிரியர்கள், பட்டதாரிச் சம்பளம் பெறமுடியாமலிருக்கிறார்கள். திறைசேரியுடன் தொடர்புகொண்டு இச் சம்பளம் வழங்குவது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். ''விஞ்ஞான கணித, ஆங்கில ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்குவது குறித்தும் எமது அமைச்சு ஆராய்ந்துவருகிறது. ஏப்ரல் மாதத்திற்குப் பின்பு ஆசிரியர் பற்றுக்குறையும் நீங்கிவிடும்.

### நியாயமான கோரிக்கைகள்

''நீங்கள் சமர்ப்பித்த கோரிக்கைகள்நியாயமானவை அவைகளைத் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சின் கவனத்திற்குத் தெரியப்படுத்தி ஆவனசெய்வேன்.''

### ஜேர்மன் பிரதிநிதி

ஜேர்மன் தொழிற்சங்கப் பிரதிநிதியும், பிரட்ரிக் ஈபேர்ட் மன்றப் பிரதிநிதியுமான திரு. ஸ்டெபன் குரேபட் பேசுகையில் ''தொழிற்சங்கத்திற்குத் தொழிலாளர்களும் தமது பங்களிப்பைச் செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் தொழிற்சங்கம் அபிவிருத்தி அடையமுடியும்'' என்று வலியுறுத்தினர்.

திரு. ஸ்டெபன் குரேபட் மேலும் பேசுகையில், இ. த. ஆ. சங்கத் தலைவரும், செயலாளரும் சங்க வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், ஆசிரியர்களின் நலன்களிலும் அதிக அக்கறைகொண்டு செயல்படுவதாகப் பாராட்டிப் பேசினர்.

---

செல்வி பேர்ள் அபயரத்தின முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி மார்ச் 17ம் திகதிவரை சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# காங்கேசன் நூலகத்துக்கு மேலும் நூல்கள் தேவை

## அமிரிடம் கோரிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைபுதிய நூல் நிலையத்திற்கு மேலும் நூல்களை வாங்குவதற்காக 50 ஆயிரம் ரூபாவை பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டநிதியிலிருந்து ஒதுக்கித் தருமாறு காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கத்திடம் காங்கேசன் துறை அபிவிருத்திச்சபை உப அலுவலக நிர்வாக] மேற்பார்வையாளர் திரு. ஈ. சண்முகநாதன் கோரியுள்ளார்,

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய நூல்நிலையத்தில் நூல்கள்பற்றுக்குறையாக இருப்பதால் பொதுஅறிவு கல்வி மற்றும் பல விடயங்கள் சம்பந்தப்பட்ட நூல்களை மேலும் வாங்கிக்கொள்வதற்காக இந்நிதியுதவியைச் செய்துதருமாறு மேலும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் சில கோரிக்கைகளையும் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் அவர் விடுத்துள்ளார்.

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியை தரமுயர்த்தி உயர்ந்த தரத்திற்கு கொண்டு வருவதுடன் மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையையும் ஓர் மாவட்டவைத்தியசாலையாக மாற்றி அதன் ஒருபகுதியாக மார்புநோய்ச்சிகிச்சை இடம்பெறச்செய்யவேண்டும். இதன் மூலம் ஏராளமான மக்கள் பயனடைவர்.

காங்கேசன்துறை புகையிரத நிலைய அபிவிருத்தி குறித்து ஏற்கனவே பலர்வந்து பார்வையிட்டும் இன்னமும் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே இதனை அபிவிருத்திசெய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

காங்கேசன்துறையில் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திற்காக ஒதுக்கிவிடப்பட்ட நிலம் வீணேகிடக்கிறது இதனைப்பயன்படுத்திஇப்பகுதிக்கு சிறந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை இங்கு நிறுவவேண்டும்.

### பணிப்பாளர் உரை

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் பேசுகையில், ''கல்வியமைச்சின் செயலாளர் திரு.சில்வா, 1980ம் ஆண்டு நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தினல் வேலை இழந்திருந்த கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 55 பேருக்குத் திரும்பவும் வேலை பெறுவதற்கு முன்னின்று உழைத்தவர் என்றும், கலவர காலத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 100 பேருக்குத் தமது சொந்தச் செலவில் யாழ்ப்பாணம் வர உதவினர்'' என்றும் பாராட்டிப் பேசினர்.

### முன்னணியில் திகழ்கிறது

கல்வியமைச்சின் கணக்காளர் திரு. இராஜ் சுப்பிரமணியம் பேசுகையில், இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்களில் இ.த.ஆ.சங்கமே முன்னணியில் திகழ்கிறதென்றும், தமிழ்ச் சமுதாயத்திற்கும், இந்நாட்டிற்கும் இச்சங்கம் மேலும் உழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.


...லிட்

...லலான

...னம்..

...நகிறது.

... வைப்புக்களுக்கு
...4%
...வருமானம் வட்டியும்
... மாதாந்தம்/கால் வரு
... வருடம்
...ப்படும்.

...துகாப்பிற்கும்
...று கூறுகின்றன:-

| ...979/80 | 1980/81 |
|---|---|
| (ரூபா) | (ரூபா) |
| ...250,000 | 5,000,000 |
| ...568,000 | 20,450,000 |
| ...835,000 | 174,094,000 |
| ...523,000 | 74,723,000 |
| ...311,000 | 329,154,000 |
| ...321,000 | 8,170,000 |
| ...321,000 | 8,170,000 |
| ...925,000 | 925,000 |

...னம்.



ஆளுநர்கள் சபை
என். யூ. ஜயவர்த்தன
(முதல்வர்)
ஏ. என். யூ. ஜயவர்த்தன
(பிரதி முதல்வரும் முகாமை ஆளுநரும்)
கே. விக்னராசா
(ஆலோசனை ஆளுநர்)
திருமதி. வை. என். பெரேரா
(நிறைவேற்று ஆளுநர்)
எஸ். எம். ஹுசெயின்
எஸ். பத்மநாதன்
கே. செல்வநாதன்
(பதில் எம். செல்வநாதன்)
ஆர். சேனதிராஜா
எம். டீ. எச். ஜயவர்த்தன

பிரதான வர்த்தக அலுவல்கள்
வாடகைக் கொள்வனவு நிதி, கடன் நிதி, குத்தகை நிதி, உறுதி வசதிகள், ஊக்குவிப்பு வசதிகள், வங்கி வசதி ஏற்பாடுகள் வர்த்தகம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சகல வகைக் காப்புறுதிகளையும் புரியும் பிரதான முகவர்

ஏனைய விபரங்களுக்கும் சேவைகளுக்கும் நாடுக:



மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
(1956 ஜுலை 4-ம் திகதி நிதிச்சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம்பெற்றது)
51, 55, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: 26611 - 8;
சர்வதேசத் தொடர்பு இலக்கம்: 547982
அன்றேல் உங்கள் அருகே உள்ள எங்கள் கிளை நிலையத்தில்:
அநுராதபுரம்:
2, ஹரிஸ்சந்திர மாவத்தை, தொலைபேசி: 534
யாழ்ப்பாணம்:
11/8, ஸ்ரான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை:
27, 1/1, தர்மபால மாவத்தை,
தொலைபேசி 041-2466
கண்டி:
115, (1-ம் மாடி) கொட்டுகொடலை வீதி,
தொலைபேசி: 08 - 4196
ஏனைய முக்கிய நகரங்களிலும் முகவர்கள் உள்ளனர்.
பொது மக்கள் நம்பிக்கையில் உருவான உறுதியான அமைப்பு.


### கந்தபுராண விழா

(மாவிட்டபுரம்)

அகில இலங்கை சைவசமய மகாசபையின் ஆதரவில் கச்சியப்பசிவாச்சாரியார் குருபூசையும், கந்தபுராண விழாவும் இன்று 7ம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இடம்பெறவுள்ளது.

திரு. இ. நம சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கந்தபுராண நூல் ஊர்வலம், புராண படனம், சொற்பொழிவுகள் என்பன இடம்பெற உள்ளன.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நிகழும் மாலை நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக இந்து கலாச்சார பீடத்தலைவர் பேராசிரியர் தா. கைலாசநாதக்குருக்கள், விரிவுரையாளர் திரு. ச விநாயகமூர்த்தி, பேராசிரியர் திரு. வே. இராமகிருஷ்ணன், கலாநிதி சி. க. சிற்றம்பலம் கலாநிதி அ. சண்முகதாஸ், பிரமஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். (க)


அதி அற்புதமான
தூய்மை!
பபிள்
சலவைப் பவுடர்.




தூய்மையான
பளிச்சிடும்
சலவைக்கு
பபிள்.

ஒரு லங்கெம் தயாரிப்பு.
விநியோகஸ்தர்கள்:
ஐலன்ட் கொன்ஸ்யூமர் சப்ளேஸ் லிமிட்டெட்
4/2, பொயிட் பிளேஸ், கொழும்பு 3. தொலைபேசி: 23649
500 கிறும்ஸ் ரூபா 18-50 சதம்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
நீங்காதநினைவு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
கமலஹாசன்—சோபா
அழியாத கோலங்கள்

## கிரிக்கெட் போட்டி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்குமிடையில் சினேகபூர்வமான கிரிக்கெட்போட்டியொன்று இன்று ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

## தேர்த்திருவிழா

(மண்டைதீவு)

புங்குடுதீவு தல்லையப்பற்று முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி
முடிசூடாமன்னன்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
உலகம் சுற்றும் வாலிபன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

4-வது வாரம்
யாழ். ரீகல் தினசரி 10—30, 2—00, 6—30, 9—30 (4 காட்சிகள்)
விஜயன்
சத்தியகலா,
தனிமரம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் தினசரி: 10.30, 2.30, 4.30, 7.00, 9.30
Christopher Lee in
Jaguar Lives
(Karate Film)

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 4—45, 7—00, 9—30
The first new Horror Creature!
The Incredible Meltingman
Adults — Susperse

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10.30, 2.00, 4.30, 7.00, 9.30
5.3.82—7.3.82
MIGHTY HIMALAYAN MAN

8—3—82 முதல்
Adventure Beyond Imagination
Walt Disney's Production
The Island at the Top of the World
(Techni Color)

விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா நடித்த
நட்சத்திரம்

## தவக்கால நற்சிந்தனை



நீ நெடுங்காலம் சீவிப்பதைப்பற்றி அல்ல, உன் மரணத்தைப்பற்றி அடிக்கடி தியானித்தால், உன்னைத் திருத்திக்கொள்ள அதிக ஊக்கமுள்ளவனாக இருப்பாயென்பதற்குச் சந்தேகமேயில்லை. மேலும் நரகத்து அல்லது உத்தரிக்கிற ஸ்தலத்து ஆக்கினைகளை முழு இருதயத்தோடு சிந்தித்துப் பார்த்தால் பிரயாசையையும், துன்பத்தையும் மனப்பூர்வமாய்ச் சகிப்பாயென்றும், அருந் தவக்கிரிகைகளுக்கும் அஞ்சமாட்டாயென்றும் நம்புகிறேன். ஆனால் இந்த யோசனை நமது இதயத்தில் ஆழமாகப் பிரவேசியாததாலும், நாம் இன்ப சுகானுபவ காரியங்களை இன்னும் நேசிக்கிறபடியாலும் குளிர்மையானவர்களாயும் சோம்பேறிகளாயும் இருந்துவிடுகிறோம்.

(கிறீஸ்துநாதர் அநுசாரம்)

## 580 நாய்களுக்கு தடுப்பு ஊசி

(கரவெட்டி)

நாய்களுக்கு விசர்நோய் ஏற்படுவதைத் தடுக்கும் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலக எல்லைப் பகுதிக்குள் 580 நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டுள்ளதாக நெல்லியடி சுகாதரப் பரிசோதகர் திரு. அ. றெபேட்ஸ் தெரிவித்தார்.

இருதினங்களாக நடைபெற்ற இத்தடுப்பு ஊசி ஏற்றும் சேவையில் மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஒரு தேசியப்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய உண்மை நிலையையும் எடுத்து விளக்கினர். இது ஒரு பெரிய நல்ல காரியமல்லவா?

''நான் பிறப்பில் கண்டி—கட்டுகஸ்தோட்டை. வளர்ப்பில் வெளிநாடு. ஆமாம், முப்பது ஆண்டுகள் வெளிநாடு தான். கடல் உணவுத்துறையில் நான் அக்கறைகொண்டு ஆர்வத்துடன் பல துறைகளையும் பயின்று அனுபவம் பெற்றவன். இலங்கை திரும்பிய நான்கு ஆண்டுகளுக்குள் இப்பாரிய திட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருக்கிறேன். இது ஒரு சவால் என்றாலும், இங்கு கிடைக்கும் பெரும் ஒத்துழைப்பு இத்தொழில் மேலும் வளர்ச்சிபெற உதவும்!

''வடபகுதிக் கடலில் நல்ல உணவு வகைகள் உண்டு. இவை தரமானவை. உலகச் சந்தையில் பெயர்போனவை. சரியான முறையில் அணுகினால் தொழில்வாய்ப்பு அதிகரிப்பதுடன் கடல் வளமும் பெருகும்'' என்று கூறிமுடித்த அன்றிஸ் அவர்கள்;

''இத்திட்டம் இனிது நிறைவேற ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்'' என்று கூறி முடித்தார்.

### புதிய கட்டடம்

இன்று திறந்துவைக்கப்படும் புதிய கட்டடத்தில் எல்லாப் பகுதிகளும் காணப்படுகின்றன. றால், கணவாய், சிங்கிறால்மற்றும் கடல் அட்டை போன்ற கடல் உணவு வகைகளைப் பிரித்து, பதனிட்டு, குளிரூட்டி, 'பாக்'கில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விசாலமான மண்டபம் மற்றும் அறைகளும், குளிரூட்டப்பட்ட அறைகளும் காணப்படுவதுடன். பணிபுரியும் குறிப்பிட்ட தொகையினர் தங்குவதற்கு அறைகளும், சகல வசதிகளைக்கொண்ட சிற்றுண்டிச்சாலையும் காணப்படுகிறது. இதுதவிர வெளிநாட்டு உல்லாசப்பயணிகளைக் கவர்ந்திழுக்கும் 'காந்த சக்தி'யும் அன்றிஸ் அன்ட் கம்பெனி நிறுவனத்திற்கு உண்டு என்றால் மறுக்கமுடியாது.

—சாந்தா

## வெற்றிதோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி தொழில் நுட்ப பிரிவுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கோஷ்டியினர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முதலாவது இன்னிங்சில் ஸ்கந்தவரோதய கோஷ்டி 160 ஓட்டங்களை பெற்றது. யாழ். மத்திய கல்லூரி கோஷ்டி முதலாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களைபெற்றது. தொடர்ந்து ஆடிய யாழ். மத்திய கல்லூரி கோஷ்டி 3 விக்கட் இழப்பிற்கு 73 ஓட்டங்களைப் பெற்றது.

திரு. எம். யோகேஸ்வரன் நடுவராகக் கடமையாற்றினார். ]க)

## இனந்தெரியாத நபரின் சடலம்

(பண்டத்தரிப்பு)

நேற்று பண்டத்தரிப்பு தேவாலயமொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்துகிடக்கக் கண்டுபிடிக்கப்பட்ட 60 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத நபரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு யாழ் அரசினர் வைத்தியசாலை பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம்பற்றி விசாரணை நடத்திய திடீர்மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸஸ் அத்தனாசியார் சடலத்தை அடையாளம் கண்டபின்பு பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்புக்கூறுவதை ஒத்திவைத்தார்.

காகிதாதிகள்-
பாடசாலை உபகரணங்கள்
மின்சார உபகரணங்கள்
மின்னியல் பொருட்கள்
மின்சார பாவனைப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்களுக்கும்
அம்பலவாணர் அன் சன்ஸ்
(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்''
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)
தலைமையகம் :
பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு 11.
போன் : 24821 — 28244
லெட்சுமிபவான்,
97, ஒல்ஹொட்மாவத்த, — — கொழும்பு - 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,
நுண்கலைப்பீட, கவின் கலை மன்றம் வழங்கும்
"நாதவாஹினி" கலைவிழா


பிரதம விருந்தினர்:
திரு/திருமதி இந்திரபாலா அவர்கள்

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 08—03—1982 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5—30 மணி

டிக்கற் விபரம்: 15/-, 10/- 5/- (2483)

## துர்க்கா சினிமா (தெல்லிப்பழை)

தினசரி 2-30, 6—30, 9—30, சனி, ஞாயிறு 10—30



1-வது மகோன்னத ஆண்டு நிறைவுவிழா
7-3-82 (இன்று)
வெற்றிமுரசு கொட்டி
4-வது வாரமாகக் காட்சியளிக்கிறது

காதல் இளவரசன்
கமலின்
"குரு" (கலர்)
2485

## கிராமிய தொழில்துறை அமைச்சு வழங்கிய 3 பயிற்சி நெறிகள்

மின்மரவேலைப் பயிற்சி, காந்திக் கிராமம் கிளிநொச்சி

15 க்குமேல் 30 வயதுவரை ஆண்கள் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம். விடுதி வசதி உண்டு. படிச்செலவும் உற்பத்தியில் 8% வீத லாபமும் வழங்கப்படும். சான்றிதழ்கள் தரப்படும். உதவியாக விவசாயப் பயிற்சியும் உண்டு. சமீபத்தில் கௌரவ கிராமிய தொழில்துறை அமைச்சர் ஆரம்பித்துவைப்பார்.

● ● ●

அலங்கார நெசவுவேலை அன்னை கஸ்தூரிபாய் இல்லம் தருமபுரம்

15 க்கு மேல் 30 வயதுவரை பெண்கள் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம். விடுதிவசதி உண்டு. வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

● ● ●

தென்னம்தும்பு பதனிடும் பயிற்சி, காந்திய நிலையம், உருத்திரபுரம்

15 க்கு மேல் 30 வயதுவரை ஆண், பெண் இருபாலாரும் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம், ஆண்களுக்கு விடுதிவசதி உண்டு. இந்த வருட நடுப்பகுதியில் ஆரம்பமாகும்.

கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் பயிற்சி காந்திக்கிராமம் மதுரை

• 20 வயதுக்குமேல் 30 வயதுவரை உயர்தரகல்வி அறிவுடன் தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கலாம். விடுதி வசதிச்சலுகை உண்டு. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுத் தெரிவுசெய்யப்படும்.

[இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]

கௌரவ பொதுச் செயலாளர்
அகில இலங்கை காந்திசேவா சங்கம்

காந்திநிலையம், உருத்திரபுரம்.
தந்தி: 'காந்தீயம்', கிளிநொச்சி. 2427

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காரைநகர் சம்பந்தர்கண்டி பழைய விதானையார் வளவு காலம் சென்ற மணவாள பிள்ளையின் பங்கு 4½ப் பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். அருணாசலம், ஆஸ்பத்திரியடி, மூளாய். (2474)

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கு அண்மையில் ரோட்டு ஓரம் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, சண்முகலிங்கம், கிராமசபைக்கருகில், திருநெல்வேலி. (2403)

நல்லூர் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து ஒரு மைல் தூரத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 2470, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (2470)

யாழ். மனோகராத் தியேட்டர் சந்தி, நாவலர் வீதியில் காலியான நிலையில் இரண்டு கடைகளும் ½ பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு, கடைகளும் காணியும் தனித்தனியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: 23, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (2467)

பல்கன் (Fa'con) ஸ்கூட்டரும், தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடலாம். பொ. இராசநாயகம், மே/பா ச. வ. சோமசுந்தரம், சட்டத்தரணி, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. (2453)

இரண்டு ஒரிஜினல் திண்டுக்கல் இரும்புப்பெட்டி (ஒன்று ஒற்றைக் கதவு) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம், 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2457)

சுண்ணாகம் மின்சார நிலையத்துக்கு மிக அண்மையிலும் ஊரெழு மேற்கு பொக்கனை வீதியை வடக்குப்பக்க எல்லையுமாக 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ச. இராசப்பா, அரசாங்க நில அளவையாளர், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (2441)

நாவலர் ரோட் ஆனைப்பந்தியடி தனியார் வைத்திய சாலைக்கு அருகாமையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கந்தையா, 271/6, நாவலர் ரோட், ஆனைப்பந்தியடி. (2445)

யாழ். கொன்வென்ற் வீதியில் வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தியாகராஜா, 32, கொன்வென்ற் ரோட், யாழ்ப்பாணம். 2480

## தேவை

உடற்பயிற்சிப் போதனாசிரியை தேவை. தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். அதிபர், யா/திருக் குடும்பக் கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை, யாழ்ப்பாணம். (2478)

பாதுகாப்புச் சேவைக்கு திறமை வாய்ந்த ஒரு கன்வேசர் தேவை. கொமிஷன் வழங்கப்படும். விண்ணப்பிக்க: விளம்பர இல. 2443, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (2443)

பிரபல தையல் நிறுவனம் ஒன்றுக்கு தையல் வேலை தெரிந்த நன்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். சுகிர் காமன்ஸ், 72, 1—ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (2466)

யாழ். நகர எல்லைக்குள் அல்லது மானிப்பாய் — கொக்குவில் ஆகிய இடங்களில் பிரதான வீதிக்கு அண்மையில் ஒரு கைத்தொழில் நிறுவனத்திற்கு சுமார் 1000 சதுர அடி விஸ்தீரணமுள்ள இடவசதி அல்லது ஒரு வீடு வாடகைக்குத் தேவை. செ. ஞானராஜா, ராம்சன்ஸ், 19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 508. (2473)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 2 அல்லது 3 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளைக் கொண்ட வீடு விலைக்குத் தேவை. தொடர்பு கொள்க: பிலிப் அலெக்சாண்டர், இல: 8, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8154 (2335)

## வாடகைக்கு

பருத்தித்துறை, புலோலி கிழக்கு, வல்லிபுரம் வைத்தியர் ஒழுங்கையில் வீடு, கிணறு மற்றும் சகல வசதிகளுடன் 7 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு நேரில் வ. கு. கணபதிப்பிள்ளை, சட்டத்தரணி வல்லிபுரப் பரியாரியார் வளவு, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 2439

37, ஸ்ரான்லி வீதிக்கடையோடு இணைந்த 4 அறைகளும் (Audit firm, Store room, Office இவற்றிற்கு உதவும்) விபரம் 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2472

## பயிற்சி

துரித ஆங்கிலக் கல்வியும், டிப்பிளோமா தையல் பயிற்சியும் 24—03—82 ஆரம்பமாகின்றது. பெண் ஆசிரியரினால் போதிக்கப்படுகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2475)

## வகுப்பு

எயர் கண்டிஷன் — ரெப்பிறிஜிரேட்டர் வகுப்புகள் 11—3—82 இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க: ஒட்டோ கூல் என்ஜினியேர்ஸ், கந்தப்பசேகரம் லேன், (சாந்தி சினிமா முன்பாக) யாழ்ப்பாணம். 2481

### காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம் அறிவித்தல்

2000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. 19—3—82 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மீளப் பெறும் வைப்புப் பணமாக ரூபா 250/- உம் செலுத்த வேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும், காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் தலைவர், ப. நோ. கூ. சங்கம், காரைநகர் என்ற முகவரிச்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். இக் கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமை உண்டு.

குறிப்பு: காரியாலயத்தில் ரூபா 2/ செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.
5—3—82. 2479

### பாஷையூர் ம. மு. சங்கம்

[யாழ்ப்பாணம்]

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க க. ச. ச. நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர்: பிலிப் ரேச், உபதலைவர்: எ. இராசு, உபசெயலாளர்: பொ. இராயப்பு, பொருளாளர்: வ. ஸ்ரனிஸ்லொஸ்.

### யாழ். மருத்துவச் சங்கம் - மருத்துவக் கண்காட்சி

1982 ஏப்பிரல் 21 முதல் 25 வரை

யாழ் மருத்துவச் சங்கம், மாணவர் மத்தியில், நலம் பேணல், நோய்களின் தடுப்பு முறைகள் பற்றியவொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அறிவைப் புகட்டும் நோக்குடன், மருத்துவ அறிவு பற்றிய படச் சுவரொட்டிகள், சுலோகங்கள், கட்டுரைகள் ஆகிய போட்டிகள் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்காய விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் இன்னும் பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள், வைத்திய கலாநிதி ந. சிவராசா (மருத்துவக் கண்காட்சி, பாடசாலைப் பகுதி உபகுழுத் தலைவர்), மருத்துவ ஆய்வுகூடம், அரசினர் பொது மருத்துவ மனை, யாழ்ப்பாணம் அவர்களுடன் எழுத்து மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றன.

தலைவர், யாழ். மருத்துவச் சங்கம்,
1982—3—5. (2477)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

191, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி; வைரம்

# யாழ். நகரில் கண்தான சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கையில் கிராமரீதியாகக் கண்தானம் பற்றிப் பிரசாரம் செய்வதென்று நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட யாழ் கண்தான சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது. யாழ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள இச்சங்கம் இலங்கை கண்தானசங்கத்தின் அங்கமாக விளங்கும்.

யாழ். நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள 'லக்னிவாசா' விடுதிச் சாலையில் லயன் டாக்டர் எம். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற யாழ். கண்தான சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, லயன் உதவி மாவட்ட ஆளுநர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், யாழ். ஆஸ்பத்திரிகண்சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் திருமதி கண்ணுத்துரை, லயன் டாக்டர் யோகு பசுபதி மற்றும்லயன்ஸ் கழகப் பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். சட்டவைத்திய அதிகாரி லயன் டாக்டர் ந.சரவணபவானந்தன் ஆரம்ப உரை நிகழ்த்தினுர். அவர் பேசுகையில், வடபகுதி மக்கள் கண்தானம் செய்வதில் சிறிதும்அக்கறை செலுத்தாதது கவலைக்குரியது என்றும் கண்தானம் பற்றி இச்சங்கம் வடபகுதியின் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று பிரசாரம்செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்,

இலங்கை கண்தான சங்கத்தின்அங்கமாக யாழ்.கண்தான சங்கம் இயங்குவதன் காரணங்களை டாக்டர் சரவணபவானந்தன் விளக்கிக்கூறினுர்.

டாக்டர் திருமதி கண்ணுத்துரை பேசுகையில் பார்வை இழந்த எல்லோருக்கும் தானமாகப் பெறும் கண்பயனளிக்காதென்றும் விழிவெண்படலம் பாதிப்புற்றவர்களே இதனுல் பயன்பெறலாமென்றும் கூறினுர். ஒருவர் மரணித்து மூன்று மணிநேரத்திற்குள் அவரது விழிகள் அகற்றப்படவேண்டுமென்றும் அகற்றப்பட்டவிழி மூன்று நாட்களில் பொருத்தப்படவேண்டுமென்றும், யாழ், ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு இதுசம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் டாச்டர் திருமதி கண்ணுத்துரை கூறினுர்.

பிரபல வர்த்தகர் லயன் இம்மனுவல் ஜோசேப் கைதடி நபீல்ட் பாடசாலை அதிபர் ஆகியோரும் ஜெயசிங் டேவிட்டும் பேசினுர்கள். டாக்டர் எம். சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துப்பேசினுர்

சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, உபபோஷகர்கள் சத்திர சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் திருமதி கண்ணுத்துரை, டாக்டர் எஸ். அருணுசலம். தலைவர் லயன் டாக்டர் ந. சரவணபவானந்தன், உபதலைவர்கள் லயன் டாக்டர் யோகு பசுபதி, லயன் டாக்டர் எஸ். சபாரத்தினம். செயலாளர் திரு. ஜெயசிங் டேவிட். பொருளாளர் லயன் டாக்டர் எம்.. சுந்தரலிங்கம்.

## இ. த. ஆசிரியர் சங்கத் தேர்தல்

# தலைவர் வணசிங்கா செயலாளர் மகாசிவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக திரு. டி. எஸ். வணசிங்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்று நடந்த தேர்தலில் பொதுச் செயலாளராக திரு க. மகாசிவம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றும் உத்தியோகத்தர் விபரம்:

நிதிச்செயலாளர் திரு. தா. சோதிநாதர், நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராஜா, கல்விகலாச்சாரச் செயலாளர் திரு. ஆ.க. மாணிக்கம் பிரசாரச் செயலாளர் திரு. சி. தண்டாயுதபாணி. பத்திரிகைச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம்.

# "இரும்புப் பைப்பால், 1ம் எதிரி ஓங்கித் தலையில் அடித்தார்"

(சாவகச்சேரி)

சம்பவதினம் நாங்கள் சைக்கிலில் வந்துகொண்டிருக்கும் பொழுது எரிகள் ஐவரும் சைக்கிலில் வந்து கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டவுடன் அவர்கள் இறங்கி 'நில்லுங்கோடா' என்ருர்கள் நாங்கள் சைக்கிலால் இறங்க 1ம் எதிரி தவராசதுரைக்கு இரும்புப்பைப்பால் ஓங்கித் தலையில் அடித்தார் 4ம் எதிரி மகேந்திரன் என்னை ஒடும்படி கூறினுர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடந்த உடுத்துறைக் கொலை வழக்கில் சாட்யமளித்த உடுத்துறையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை ஆண்டிஐயா என்பவர் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் மருதங்கேணியைச்சேர்ந்த கந்தராசசிங்கம். நமசிவாயம், கனகரத்தினம் மகேந்திரன், கனகரத்தினம் என்பவர்கள் உடுத்துறையைச் சேர்ந்த சங்கரபிள்ளை தவராசதுரையைக் கொலை செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்து. வாதி தரப்பில் பொலிஸ்சார்ஜன் வி. செல்லையாவும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனனும் ஆஜராகினர்.

## இராணுவத்தினரால் கைதான

# இரு இளைஞரும் பிணையில்செல்ல அனுமதி

(புலோலி)

சந்தேகத்தின் பேரில் இராவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு இளைஞர்களும் தலா 500ரூபா பிணையில் விடப்பட்டனர்.


லல்வெட்டித்துறை இராணுவ லெப்டினன் ஆர், கே. வீரசிங்க தலைமையிலான 6 பேரடங்கியஇராணுக்கோஷ்டி ரோந்து நடவடிக்கையிலீடுபட்டபோது பருத்தித்துறை சந்தைக்கு அண்மையில்சந்தேகத்திற்கிடமாக நடமாடிய பருத்தித்துறை என். எம். வீதியைச்சேர்ந்த கந்தசாமிநாகேந்திரன் 3ம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த த சிவலிங்கம் ஆகிய இருவரையும் கைது செய்தது.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் இராணுவத்தினர் பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். பொலிசார் இரு சந்தேகநபர்களையும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். கிருஸ்ணராசா சந்தேக நபர்கள் மீன் பிடிப்பவர்கள் என்றும் இவர்கள் வேறு எந்த பயங்கரவாதச் செயல்களிலும் ஈடுபடாதவர்கள் என்றும் சுட்டிக்காட்டினுர்.

நீதவான் சந்தேகநபர்களைத் தலா 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

(க)

அறுபது லட்சம் ரூபா பெறுமதியான அறுபதி ணுயிரம் தொன் இலங்கைஉப்பு விற்பனைக்கான ஒப்பந்தம் இலங்கை உப்புக்கூட்டுத்தாபன கொழும்பு தலைமை அலுவலகத்தில் உப்புக்கூட்டுத்தாபனத் தலைதர் திரு. எச். பி. வெரப்பிட்டியாவுக்கும் உப்பைக் கொள்வனவு செய்த காங்கேசன்துறை ஜெயபாலசிங்கம் ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. க. ஜெயபாலசிங்கத்திற்கு மிடையில் கைச்சாத்திடப்பட்டது. உப்புக் கூட்டுத்தாபன தலைவரிடமிருந்து திரு. கே. ஜெயபாலசிங்கம் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம், இந்தவைபவத்தில் சிறீலங்கா உப்புக்கூட்டுத்தாபன நிர்வாக இயக்குனர்திரு. அமரகேமா மதுமாவும் கலர்துகொண்டார்,




பரந்தன் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து

பொதுக்கூட்டம்

இன்று (ஞாயிறு) மாலை 5மணிக்கு

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

பாலாதம்பு, கீர்த்தி செனவிரத்தின ஆகியோர் உரையாற்றுவர்.

மாபெரும் தொழிலாளர் கட்சிக்கான இடைக்காலத் தேசியக்குழு 2471


# மரண அறிவித்தல்

## திரு. வி. ஆர். முருகேசு

ஏழாலை தெற்கைச் சேர்ந்த வி. ஆர். முருகேசு காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற ரெசபேல் பரிபூரணத்தின் அன்புக் கணவரும், திருமதி திவ்வியதேவி ஞானந்தம் இளைப்பாறிய ஆசிரியை வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம் (மாலைதீவு) திரு. ஜீவகாந்தி திரு. சுகுணகாந்தி (இங்கிலாந்து), திரு. கருணுகரகாந்தி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும், வைத்திய கலாநிதி ஞானந்தம், திருப்பதி, தேவி, கிருபா ஆகியோரின் அன்பு மாமனுரும், சித்திரகுமாரி, தேவகுமார், ஜீவநேசன் ஜீவபாலன், ஜீவகுமார், ஜீவரூபன் ஜீவலதா றிச்சேர்ட் றூபஸ் றெபீனு, தர்சினி, டிலூஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர். அன்னுரின் நல்லடக்க ஆராதனை இன்று (7—3—82) ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு அன்னுரின் இல்லத்தில் நடைபெறும். 2482

# நீதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லது பாதுகாப்புப் படைவீரர்களோ அநியாயமாகக்கொலை செய்யப்படுவதைப் பார்த்துச் கொண்டு தாம்சும் மாவிருக்கப் போவதில்லை என்று இராணுவ உயர் அதிகாரியின் அறிக்கை வெளிவந்திருந்த பத்திரிகையின் மை உலருமுன்பாகவே யாழ்.மாவட்டத்துக்குள்மற்றுமொரு தமிழ் இளைஞர் சுடப்பட்டுள்ளார். இராணுவத்தினர் வடபகுதியில் பொலிஸ் கடமைகளை மேற்கொள்ளவில்லைஎன்றும் ,பொலிசாருக்கு அவர்களது கடமைகளைச் செய்வதற்கு உதவிபுரிந்துவருவதையே தமதுகடமையென்றும் மற்ருேர் அறிவித்தல் கூறுகிறது.

''ஆயின் நடைமுறையில் அப்பாவிமக்கள் குறிப்பாக இளைஞர்கள் தாக்கப்படுவதும் சுடப்படுவதும் தொடர்ந்துகொண்டே போகிறது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டும் ஒரேவாரத்துக்குள் இது இரண்டாது சம்பவம். அகால நேரத்திலன்றி இரவு நேரங்களில் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதை இராணுவத்தினர் விரும்பாவிட்டால் ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பிப்பதே மேலானது. நிரபராதிகளான அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாக்க வேறுவழி கிடையாதென்ற எண்ணமே எழுகின்றது. திரைப்பட மாளிகைகளை இரவுக்காட்சிகளை நடத்த அனுமதித்துக் கொண்டு காட்சிகள் முடிந்து வீடு திரும்புவோர் இராணுவத்தினரால் தாக்கப்படுவதை அரசு அனுமதிக்கக்கூடாது. இரவுநேரத்தில் திரைப்பட மாளிகைகளை வேண்டுமானுல் இழுத்து மூடும்படி பணிக்கலாம்.

'சந்தேகத்துக்குரியவர்களைப் பொலிசார் கைதுசெய்து, விசாரிப்பதையோ நீதி விசாரணைக் குட்படுத்துவதையோ யாரும் குறை சொல்லமாட்டார்கள். அக்கடமைகளில் இராணுவத்தினர் உதவும்படி அழைக்கப்பட்டால்தன்னிச்சையாக அவர்கள் பொது மக்களை வேட்டையாட முற்படுவது தடுக்கப்படல் வேண்டும். நீதி விசாரணையைத் தொடர்ந்து நீதிபதி அளிக்கவேண்டியதண்டனையை இராணுவத்தினர் தன்னிச்சையாக நிறைவேற்ற முற்படுவதை மனித உரிமைகளில் நாட்டமுடையோர் கண்டிக்க வேண்டும்.

மனித உயிர்களில் மதிப்பு வைத்து, அவர்கள் பேரில் கரிசனையுடையவர்களாக நடந்து கொண்டு இது குறித்த விவகாரங்களைப் பாராளுமன்ற மேடையில் கண்டிக்க முன்வருமாறு தமிழர்விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பரிந்து மன்ருடுகிறேன்.''

# அமைச்சருக்கு கிளிநொச்சியில் மோகவரவேற்பு

(யாழ்ப்பாணம்)

காணி, காணி அபிவிருத்தி, மகாவலிஅபிவிருத்தியமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா நேற்றுக்காலை கிளிநொாச்சிக்கு வந்தபோது அமோகவரவேற்ளிக்கப்பட்டது.

ப அமைச்சரை யாழ். மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன், யாழ். மாவட்ட செயலாளரும் யாழ், அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா உட்பட யாழ். மாவட்ட செயலக காணி, காணி அபிவிருத்தி அதிகாரி திரு. எம். பஞ்சலிங்கம், உட்பட மற்றும் யாழ். செயலக மேலதிக, உதவி அரசாங்கஅதிபர்கள் காணி அதிகாரிகள் மாலை சூட்டி வரவேற்றனர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 7-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Bo 49, Jaffna தொலைபேசி 7707, 389, 8126.